Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

Calendar
Miscellaneous Case No.CC.No. 57/2018
Preliminary Register

Deposition of ....PW1 .Witness for........... Prosecution

Name : பூபதி
Father's /Husband Name :மாரியிப்பன்
Village : செங்கன்கொட்டாவூர்
Taluk : ஊத்தங்கரை
Calling : PW 1
Occupation : பேக்ரி
Religion :
Age : 40

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 02.12.2022.

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து பேக்கரி கடையில் வேலை பார்க்கிறேன். கடந்த 02.08.2017 ம் தேதி தேவேந்தின் என்பவர் சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்ற போது பாண்டவர் நகர் அருகே வந்த போது மாலை சுமார் 5 மணிக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்தவர் தேவேந்திரன் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதியதால் வலது பக் தோள் பட்டை , தலை ஆகிய இடங்களில் அடிப்ட்டிருப்பதாக சதீஷ் என்பவர் போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். நான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு சென்று தேவேந்திரனை பார்த்தேன் அ்ங்கு அவர் பேச முடியாத நிலையில் இருந்தார். மேல் சிகிச்சைகாக தருமபுரி அரசு மருத்துவனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து மீண்டும் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 5 நாள் சிகிச்சைக்கு பிறகு இறந்து விட்டார். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். . ( **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். போலீசார் என்னை விசாரிக்கும் போது நான் என் முதல் விசாரணையில் மேற்சொன்ன சங்கதிகள் தான் சொன்னேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் காவல் நிலையத்தில் இருந்த போலீசார் எழுதினார். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியது என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்சொன்னது போல் விபத்து நடக்கவில்லை என்று ம்த தேவேந்திரன் தன்னிச்சையாக விழுந்து விட்டார் என்றும் நஷ்டஈடு பெறுவதற்காக பொய்யாக புகார்அ ளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Judicial Magistrate,
Uthangarai.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

Calendar
Miscellaneous Case No.CC.No. 57/2018
Preliminary Register

Deposition of ....PW2 .Witness for........... Prosecution

Name : அலமேலு
Father's /Husband Name :தேவராஜ்
Village : ஊமைனூர்
Taluk : ஊத்தங்கரை
Calling : PW 2
Occupation : கூலி
Religion :
Age : 34

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 02.12.2022.

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 02.08.2017 ம் தேதி காலை 5 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது எனது கணவர் போனில் இருந்து ஒருவர் எனக்கு போன் செய்து எனது கணவர் அடிப்பட்டி கடப்பதாக தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்குள் எனது கணவரை உத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டதால் நான் அங்கு வந்து பார்ந்ததேன். அவருக்கு வலது தேள் பட்டை , தலை, கால்ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. அவர் பேச முடியா த நிலையில் இருந்தார். த மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவ மனைக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைகாக சேலம் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தார்கள். 3 நாட்கள் கழித்து அ.சா.1 பூபதியை காவல் நிலையத்திற்க புகார் கொடுக்குமாறு கூறினேன், சிகிச்சையில் இருந்த கணவர் 6 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். இறந்துவிட்ட என் கணவரை பிரேத பரிசோதனை செய்து என்னிடம் ஒப்படைத்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த விபத்து சம்பந்தமாக நான் எதுவும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக நஷ்டஈடு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன து போல் விபத்து நடக்கவில்லை என்றும் நஷ்டஈடு வழக்கிற்காக பூபதியின் மூலம் பொய்யாக புகார் அளித்து , வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Judicial Magistrate,
Uthangarai.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

Calendar
Miscellaneous Case No.CC.No. 57/2018
Preliminary Register

Deposition of ....PW3 .Witness for........... Prosecution

Name :சுப்பிரமணி
Father's /Husband Name :கண்ணகவுண்டர்
Village : அண்ணாமலையூர்
Taluk : ஊத்தங்கரை
Calling : PW 3
Occupation : கூலி
Religion :
Age : 66

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 02.12.2022.

**முதல் விசாரணை :**

நான் மேற்சொன்ன முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பூபதி, அ.சா.2 அலமேலு ஆகியோர்களை தெரியும். 02.08.2017 ம் வருடம் தேவன் என்கிற தேவராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தில் கோயில் ஆடு வாங்குவதற்காக கொட்டாவூர் சென்று விட்டார் சென்று விட்டு திரும்பி வரும்போது பாண்டவர் நகர் அருகே மாலை 5.30 மணிக்கு விபத்து நடந்ததாக போன் மூலம் எங்களுக்கு தகவல் வந்தது. நான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தேன். அவருக்கு வலது தோள் பட்டை, தலை ஆகிய இடங்களில்அடிப்பட்டு இருந்து அவர் பேச முடியா நிலையில் இருந்தார். இது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். 3 நாள் கழித்து தருமபுரி அரசு மருத்துவ மனையில் இறந்துவிட்டார். போலீஸ் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்து நடந்த பிறகு எப்போது தேவேந்திரனை பார்த்தேன் என்றால் மாலை

சுமார் 5.30 மணிக்கு பார்த்தேன். இந்த விபத்து யாருடைய அஜாக்கிரதையனால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியது என்றால் சரிதான்.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Judicial Magistrate,
Uthangarai.

ஒம்./-xxxxxxx
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை.